COMMUNITY HEALTH ASSIST SCHEME

# சமூக சுகாதார உதவித் திட்டத்தின்கீழ் (CHAS) உங்கள் வீட்டுக்கு அருகிலுள்ள பொது மருத்துவ (GP), பல் சிகிச்சை மருந்தகங்களில் உங்களது சுகாதார உதவி அட்டையைப் பயன்படுத்தி கட்டணச்சலுகைகள் பெறுங்கள்.



உங்களது சுகாதார உதவி அட்டையைப் பெற்றுவிட்டீர்களா அல்லது புதுப்பித்துவிட்டீர்களா?

முன்னோடிகளும் விண்ணப்பிக்கலாம்! தகுதி பெறுபவர்கள் கட்டணச்சலுகையுள்ள நிபுணத்துவ வெளிநோயாளி மருந்தகங்களிலும்* முன்னோடித் தலைமுறை அட்டைக்குரிய சலுகைகளோடு கூடுதல் சலுகைகளைப் பெறுவார்கள்.

எனக்கு உடல்நலம் இல்லாதபோது, நான் பழக்கப்பட்ட குடும்ப மருத்துவரிடம் செல்லவே விரும்புகிறேன்.

CHAS அட்டையுடன் எங்கள் மருத்துவரிடம் செல்வது இப்போது அதிக கட்டுப்படியாவதாகப் பாட்டி சொல்கிறார்!

**ஏதாவதொரு சமூக மன்றம் / நிலையம், பொது மருத்துவமனை அல்லது பலதுறை மருந்தகத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.**

## CHAS திட்டத்திற்குத் தகுதிபெற:

- சிங்கப்பூர் குடிமக்களாக இருக்க வேண்டும்
- **ஒவ்வொரு நபருக்கான வீட்டு மாத வருமானம்**^ $1,800 அல்லது அதைவிடக் குறைவாக இருக்க வேண்டும் (வருமானம் உள்ள குடும்பங்களுக்கு)
- **வீட்டின் ஆண்டுமதிப்பு**# $21,000 அல்லது அதைவிடக் குறைவாக இருக்க வேண்டும் (வருமானம் இல்லாத குடும்பங்களுக்கு)




^ ஒவ்வொரு நபருக்கான வீட்டு மாத வருமானம் என்பது குடும்பத்தினரின் மொத்த மாத வருமானத்தை சேர்த்து வாழும் குடும்ப உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையால் வகுத்து கணக்கிடப்படுகிறது. எடுத்துக்காட்டாக: சேர்ந்து வாழும் நால்வர் கொண்ட குடும்பத்தின் மொத்த மாத வருமானம் $7,200 என்றால், ஒவ்வொரு நபருக்கான வீட்டு மாத வருமானம் $1,800 ($7,200 ÷ 4 = $1,800).

# உங்கள் வீடு வாடகைக்கு விடப்பட்டு உள்ளது என்றால், அதன் வருடாந்திர வாடகை மதிப்பீடே ஆண்டு மதிப்பாகும். ஆண்டு மதிப்பைச் சிங்கப்பூர் உள்நாட்டு வருவாய் ஆணையம் மதிப்பிடுகிறது. AV $21,000 – க்குள் இருந்தால், எல்லா HDB குடியிருப்பு வீடுகள் மற்றும் சில விலைக் குறைவான தனியார் இருப்பிடங்களையும் காப்பீடும்.

* CHAS விண்ணப்பம்/புதுப்பிப்பு ஏற்கப்படும் முன்னோடிகள் கட்டணச்சலுகையுள்ள நிபுணத்துவ வெளிநோயாளி மருந்தகங்களுக்கும் செல்லும்போது தானாகவே கூடுதல் கட்டணச்சலுகைள் பெறுவார்கள்.

மேல் விவரங்களுக்கு அழைக்கவும்:

**1800-275-2427** (1800-ASK-CHAS)

**www.chas.sg**

agency for integrated care

MINISTRY OF HEALTH SINGAPORE